DEPOSITION OF WITNESS
(Chapter XXIII code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI
Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.
Judicial Magistrate, Manapparai

Date: 13.03.2026

STC No.518/2024

சாட்சி :PW2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு. ஆனந்த் | ஜாதி | : |
| த/பெ/க/பெ. | : திரு. செல்லக்குட்டி | தொழில் | : விவசாயம் |
| கிராமம் | : முத்தப்புடையான்பட்டி | சமயம் | : |
| தாலுக்கா | : | வயது | : 30/2026 |

( வழக்கறிஞர் ஆஜர்)

---

**புகார்தாரர் தரப்பு முதல் விசாரணை**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன் இந்த வழக்கிற்காக நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். இந்த நிருபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு நன்கு தெரியும். நிருபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

2. நான் எந்த ஊரில் வசித்து வருகிறேன் என்றால் முத்தப்புடையான்பட்டியில் வசித்து வருகிறேன். மனுதாரர் செல்லக்குட்டி என்பவர் எனது தகப்பனார் என்றால் ஆமாம். எதிரி எவ்வளவு தொகை தரவேண்டும் என்றால் ரூ. 5 லட்சம். வட்டிக்கு தான் வாங்கினாரா என்றால் இல்லை, கைமாற்றாக கேட்டார். ரூ. 5 லட்சம் எப்போது எதிரிக்கு கொடுத்தேன் என்றால் 30.05.2024 அன்று கொடுத்தேன். மேற்படி எதிரிக்கு கடன் கொடுக்கும் ஏதாவது ஆவணம் பெறப்பட்டதா என்றால் இல்லை. இவ்வளவு பெரிய தொகையை எதிரிக்கு எப்படி கொடுத்தேன் என்றால் நான் கோழிப்பண்ணை, மாட்டுப்பண்ணை வைத்திருந்தேன். எதிரி கோழிக்கடை வைத்திருந்தார். அதில் வரவு, செலவு இருந்ததால் அந்த நம்பிக்கையின் பெயரில் எதிரிக்கு கடன் கொடுத்தேன்.

3. எதிரிக்கும், எனக்கும் பழக்கம் என்றால் எனது அப்பாவிற்கும் பழக்கம்தான். வங்கி பரிவர்த்தனை நடந்துள்ளதா என்றால் எனது வங்கி கணக்கில் நடந்துள்ளது. எத்தனை முறை நடந்துள்ளது என்றால் தெரியவில்லை. எதிரி என்னிடம் வேறு கடன் ஏதும் வாங்கியுள்ளாரா என்றால் இல்லை. ரூ.5 லட்சம்

கடன் கொடுத்தற்கு வருமான வரியில் காட்டியுள்ளேனா என்றால் இல்லை. பொதுவாக ஒரு லட்சத்திற்கு மேல் பரிவர்த்தனை செய்தால் வருமான வரியில் கணக்கு காட்ட வேண்டும் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். எதிரி கடன் கேட்ட அன்றே கடன் கொடுத்தேனா என்றால் ஆமாம். ரூ.5 லட்சத்தை எந்த வகையில் கொடுத்தேன் என்றால் பணமாக கொடுத்தேன். ரூ. 500 நோட்டுகளாக எத்தனை கட்டு கொடுத்தேன் என்றால் 10 கட்டுகள் கொடுத்தேன். அந்த 10 கட்டுகளும் வங்கி கட்டுகளா என்றால் இல்லை.

4. 500 ரூபாய் நோட்டுகளை 10 கட்டுகளாக சேமித்து வைத்திருந்தேன் என்றால் ஆமாம். பொதுவாக சேமிக்கும் போது ஒரே 500 ரூபாய் நோட்டுகளாக சேமிக்க முடியாது என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு நான் தான் கடன்கொடுத்தேன் என்றால் நானும், எனது அப்பாவும் சேர்ந்து தான் கொடுத்தோம். எனது அப்பா கொடுக்கும் போது நான் உடன் இருந்தேன்.

(எதிரி தரப்பு வழக்கறிஞர் பெயரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது )

Taken over by me in open court read over
to the witness and admitted by the witness
to be correct.

Sd/-R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.